விலை சதம் 10.

# சுதந்திரன்
SUTANTIRAN

வ- ஆ. 2001' சித்திரை 18 உ வெள்ளி (1-5-70) ஸபர் பிறை 24 —புத்தகம் 24 இதழ் 25

விரைவில் சுதந்திரனில் வெளிவருகிறது

செல்வாதாசன்
எழுதும்

நஞ்சூட்டிய காதை

தினபதியாரின் தில்லுமுல்லுகள்—திருகுதாளங்கள்— திடீர்க்கரணங்கள் — திமிர்ப் போக்குகள் — திட் மிட்ட சதிகள் — திக்குமுக்காடல்கள் பற்றிய திறனாய்வுக் கட்டுரை!

ஆதாரபூர்வமாக படங்களுடன்!

# பெரும்பான்மை இனத்திடம் கையேந்திப்பெற சுதந்திரம் என்ன பிச்சைச் சோறு?

## உரிமைகள் மறுக்கப்படும்போது எதிர்த்துப் போராடத்தான் வேண்டும்

## பொன்னம்பலத்தின் புரட்டலுக்கு எழில் தமிழ் ஆளர் இராசதுரை பதில்!

### இருவர் உள்ளம்!

தேர்தலுக்குப் பின்னர் யூ. என். பி.—தமிழரசு கூட்டுச் சேர்ந்து அரசாங்கம் அமைக்கலாம்.

—சிறிமா 29-4-70
(மித்திரன்)

யூ. என், பி. இனித் தமிழரசுக் கட்சியைக் கூட்டுச் சேர்க்காது.

—ஜி. ஜி. 25-4-70
(வீரகேசரி)

கொழும்பு ஏப். 30

சிறுபான்மை இனத்தின் உரிமைகளைப்பற்றிப் பேசும்போது பெரும்பான்மை இனம் என்ன நினைக்கும் என்று எண்ணிப் போராட்டம் நடத்தமுடியாது. என் நாட்டில் எனக்குள்ள அரசியல் உரிமைகளை நான் இழக்கிறேனு என்று சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவன் நினைக்க வேண்டும். உரிமைகள் பறிக்கப்படுகின்றன என உணர்ந்தால் அவற்றிற்காகப் போராடுவது சிறுபான்மை இனத்தின் ஒவ்வொரு உறுப்பினருடைய கடமையுமாகும்'.



—இவ்வாறு சமீபத்தில் ஜீ.ஜீ.பொன்னம்பலம்பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையொன்றுக்கு பதிலளிக்கையில் எழில தமிழ் ஆளர் இராசதுரை கூறினர். அவர் தொடர்ந்து கூறியதாவது:- மனித சமுதாயம் தோன்றிய காலத்தில் இருந்து இதுவரை எந்த இனமும் தனது சுதந்திரத்தை இழந்து வாழவிரும்பியதில்லை. ஆனல் இந்த நாட்டில் தமிழ்பேசும் மக்களின் உரிமைகளைப்பற்றிப் பேசுவதற்கு பெரும்பான்மை மக்கள் என்ன நினைப்பார்களோ என்று பயமும் கலக்கமும் பதட்டமும் கொண்டு நடுங்கும் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் பொன்னம்பலம் போன்றவர்கள் இருக்கும் வரை இந்த சமுதாயம் எப்படி உருப்பட முடியும்?

சிங்கள மக்களைத் திருப்திப் படுத்துவதன் மூலமே தமிழ்பேசும் மக்களின் உரிமைகளைப் பெறலாம் என்று திரு. பொன்னம்பலம் கூறுவது சிரிப்புக்கிடமானதாகும். ஆங்கிலேயரைத் திருப்திப்படுத்திஞல் தான் இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைக்கும் என்று

(2-ம் பக்கம் பார்க்க)

# தமிழ்நாட்டில் இந்தி வராது

## தி. மு. க. கூட்டணி ஆட்சி வரும்!

சென்னை. ஏப், 29

அடுத்த தேர்தலின் பின் தி. மு. க. முக்கிய பங்கு வகிக்கும் கூட்டணி ஆட்சியே டெல்லியில் ஏற்படும். எனவே தமிழகத்தில் மீண்டும் இந்தி வரும் என்று மாணவர்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

இவ்வாறு தி. மு. க. லேக் சபை உப தலைவர் நாஞ்சில் கி. மனோகரன் எம். பி. கூறியுள்ளார்.

தமிழ் நாட்டு மக்களின் உரிமைகளுக்காக மட்டுமே அரசியல் நடத்தும் தி. மு. க. தலைவர்களை விலைக்கு வாங்க முடியாது என்பதை சமீபத்தில் நடந்த ராஜ்ய சபைத் தேர்தல் எடுத்துக் காட்டியுள்ளது.

லோக சபையிலுள்ள 25 தி. மு. க. எம். பீக்களும் வாபஸ் பெற்ருல் இந்திரா காந்தி அரசு 24 மணி நேரத்தில் கவிழ்ந்து விடும். அந்த நம்பிக்கையினலேயே தி. மு. க. நிபந்தனையுடன் கூடிய வரம்புக்குட்பட்ட ஆதரவை மத்திய அரசுக்களிக்கிறது எனறும் அவர் குறிப்பிட்டார்.

# திருமலையே பல்கலைக்கழகம் நிறுவுவதற்கு ஏற்ற இடம்!

## தேசிய உயர் கல்விச்சபைக்கு விசாரணைச்சபை சிபார்சு!

கொழும்பு, ஏப். 30

'வடக்கு கிழக்குமாகாணங்களில் பலகலைக் கழகம் நிறுவப்படுவதறகு ஏறற இடம் திருகோணமலையே'—இவ்வாறு பல்கலைக் கழகப் பிரச்சினை குறித்து விசாரணை நடத்திய உப குழு தேசிய உயர் கல்விச்சபைக்கு சிபார்சு செய்திருப்பதாக தெரிகிறது.

இந்த உபகுழுவில் அங்கம் வகித்த மூன்று பேரில் இருவர் திருமலையில் பல்கலைக்கழகம் நிறுவப்படுவதை ஆதரித்ததாகவும் ஒருவரே அதை எதிர்த்ததாகவும் தெரிய வருகிறது—

திருமலையில் பல்கலைக்கழகம் நிறுவப்படவேண்டுமென விசாரணைக்குழு சமர்ப்பித்திருந்த அறிக்கையை தேசிய உயர் கல்விச்சபை பலமணி நேரம் விவாதித்த பின் இது சம்பந்தமாக முடிவெடுப்பதை ஒத்திவைத்துள்ளதாம்.

இதற்கிடையே பிரதமரைக் கெஞ்சி மன்ருடியும் கல்வியமைச்சரின் காலில் விழுந்தும்—இந்த முடிவை மாற்றி யாழ்ப்பாணத்தையே பல்கலைக்கழகம் நிறுவும் இடமாக தேசிய உயர் கல்விச்சபையைக் கொண்டு சிபார்சு செய்விக்க ஒரு அரசியற்கட்சியின் தலைவர் இரவு பகலாக படாத பாடுபட்டு வருகிருராம். யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் நிறுவப்படும் என்ற ஒரு சொல்லிலேயே தமது கட்சியின் உயிர் ஊசலாடி வருவதாத இவர் பிரதமரிடம் தெரிவித்துள்ளாராம்.—

# முஸ்லிம்கள் ஆதரவு மாணிக்கவாசகருககே!

வாழைச்சேனை, ஏப். 30

கற்குடா தொகுதியின் சரித்திரம் கண்டறியாப் புதுமை—தமிழ் சரித்திரத்தில் தனி இடத்தை பிடித்துவிட்ட சம்பவம்— இப்போது நடைபெற்றுள்ளது. இலங்கையின் சரித்திரத்தில் கற்குடா தொகுதியில் தமிழரசை முஸ்லிங்கள் இந்தளவு ஆதரித்தது கிடையாது. 1965ம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலின் பின்பு ஐந்து வருடங்களில் தங்களுக்கு கிடைத்த வேதனைகளுக்கு—விரக்திகளுக்கு விடு தலை கொடுக்கும் எண்ணம் கொண்டு வீறுகொண்டு எழுந்து விட்டனர். இதுவரை பொய் வாக்குறுதிகளை நம்பி, நம்பி ஏமாந்து இதயம் நொந்துவிட்ட இஸ்லாமிய பெருங்குடி மக்கள் தாங்கள் தாங்கிய வேதனைகளுக்கு பிரயாச்சித்தம் தேட முனைந்து தமிழரசை ஆதரிக்க தலைப்பட்டுவிட்டனர்.

இஸ்லாமிய இளைஞர்களால் சேர்க்கப்பட்ட கட்டுப்பணம் கையளிக்கப்பட்ட சமயம் உங்களது ஒற்றுமையையும், உணர்ச்சியையும் கண்டு உள்ளம் பூரிக்கின்றேன். இந்த நிகழ்ச்சி என் நாளில் என்றுமே மறக்க

முரசு அபேட்சகர் திரு. மாணிக்கவாசகம் அவர்களிடம் கையளித்தனர்—அச் சமயம் அங்கிருந்து ஆதரவாளர்கள் ''மாணிக்கவாசகருக்கே எங்கள் வாக்கு'' என கோசமிட்டனர். கட்

(3-ம் பக்கம் பார்க்க)

# தமிழரசு ஆதரவாளர் மீது மண் மாரி!

மானிப்பாய், ஏப். 30

சண்டிலிப்பாய் பொது மேடைக் கருத்தரங்கில் உடுவில் தொகுதி தமிழரசுக் கட்சி வேட்பாளர் திரு. தருமலிங்கம் பெரு வெற்றி பெற்றதும், தமிழ்க் காங்கிரசு வேட்பாளர் திரு. சிவநேசன் படுதோல்வி அடைந்ததும் தெரிந்ததே!

மேற்படி கூட்டம் பார்த்துவிட்டு காரிலிருந்து மானிப்பாயில் இறங்கி 'தருமர்' வென்ற பூரிப்புடன் தனது வீடு நோக்கிப் போய்க் கொண்டிருந்தார் தமிழரசுக் கட்சியின் தீவிர அனுதாபியான திருவாளர் ஆறுமுகம்! அவரைத் திடீரென்று சுற்றி வளைத்துக்கொண்டனர் பல காங்கிரசுக் காலிகள். அவர்கள் அனைவரும் பொது மேடைக் கருத்தரங்கில் படுதோல்வி அடைந்த திரு. சிவநேசனின் ஆதரவாளர்களா

(4ம் பக்கம் பார்க்க)


# தமிழரசு வீட்டை மறக்க அவர்களாலும்முடியவில்லை!

(வேலணை நிருபர்)

ஊர்காவற்றுறைத் தொகுதியில் சுயாட்சிக் கழக சார்பாக போட்டியிடும் திரு. வ. நவரத்தினமும், அவரது பாரியாரும் இப்பகுதிகளிலுள்ள வீடுகளுக்குச் சென்று வாக்கு கேட்டு வருகின்றுர்கள். திருமதி நவரத்தினம் தங்களது சின்னத்தை மறந்து இம்முறை வீட்டுக்கு நேரே புள்ளடியிட்டு எனது கணவரை ஆதரியுங்கள் என்று கூறுகின்றுர். 25-4-70 அன்று வேலணை அம்மன் கோவிலடியில் திரு. நவரத்தினத்தின் ஆலோசனைக் கூட்டமொன்று நடைபெற்ற போது கடந்த பதினைந்து வருடங்களுக்கு மேலாக வீடு, வீடு சென்று இரவும் பகலும் ஜெயித்த நாங்கள் வீட்டை எப்படி மறப்பது? என்று அவர் கூறினர்.

திருவாளர் நவரத்தினமவர்கள் இங்குள்ள வீடுகளில் சென்றவுடன் வீட்டிலுள்ளோர், ஏதுக்கையா தாங்கள் வந்தது தங்களுக்குத் தானே எங்கள் ஆதரவு என்கின்றுர்கள். அது சரி எதற்கு நேரே புள்ளடியிடுவீர்களென அவர் கேட்கும்

(4-ம் பக்கம் பார்க்க)



செல்வநாயகபுர இளைஞர் மன்றம் திரு. பா. நேமிநாதனுக்கு அளித்த வரவேற்புக் கூட்டத்தில் திரு நேமிநாதன் உரையாற்றிக்கொண்டிருக்கின்றுர். மேடையில் தலைவர் திரு. ஜீவராசா திரு. அருளப்பு ஆசிரியர் ஆகியோர் அமர்ந்திருக்கின்றுர்கள்.

# எண்ணம்

## மே நாள்!

இன்று மே நாள்!

ஒடுக்கப்பட்டவர்கள்—அடக்கப்பட்டவர்கள்—உரிமை பிடுங்கப்பட்டவர்கள் — உள்ளத்திலே ஒளி சேர்க்கும் நன்னாள்!

உழைப்பதற்கு பிறந்தவன் ஒருவன்—அதை உண்டு களிப்பதற்கு பிறந்தவன் மற்றொருவன் என்னும் நிலையை மாற்றியமைத்த புரட்சித் திருநாள்!

ஒரு நாட்டின் முதுகெலும்புகள் தொழிலாளர்களே என்ற பேருண்மையை முழு வையகத்துக்கும் புரியவைத்த பொதுநாள்!

ஆமைகள்போல் — ஊமைகள்போல்—அடக்கியொடுக்கி நசுக்கப்படும் மக்கள்—உள்ளம் வெடித்து ஒன்றுபட்டு கொதித்தெழுந்தால்—ஊதித்தள்ளிவிடுவர் சர்வாதிகாரத்தை —என்ற உண்மையை உலகுக்கு எடுத்துக்காட்டிய பொன்னாள்.

தொழிலாளர்கள் தங்கள் செங்குருதியைச் சிந்தி எலும்புகளை முறித்துக்கொடுத்து—எண்ணற்றோரைப் பலிதந்து உரிமைகளை நிலைநாட்டி—தமது திரண்ட சக்தியின் முன்னால் முதலாளித்துவத்தை மண்டியிடவைத்த மறக்க முடியாத நாள்!

ஆம், இன்று மேதினியெங்கும் தொழிலாளர்களால் இத்தினம் குதூகலத்துடன் கொண்டாடப்படுகிறது!

இந்நாட்டிலும், எல்லாக் கட்சிகளும் மேதின விழாவை போட்டி போட்டுக்கொண்டு விமரிசையாகக் கொண்டாடுகின்றன.

இந்நாட்டுக்காக உதிரம் சிந்திய 10 இலட்சம் தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளை பறித்தெடுத்து அவர்களை நாட்ற்றவர்களாக்கிய யூ. என். பியும் 'மே' தினம் கொண்டாடுகிறது—

இந்த அக்கிரமத்துக்கு— அநீதிக்கு— உறுதுணையாக இருந்த தமிழ் காங்கிரசும் மே தினவிழா நடத்துகிறது!

மலை நாட்டுத் தமிழ்த் தொழிலாளர்களை கட்டாயமாக நாடு கடத்த வேண்டும்— ஒதுக்கப்பட்ட மக்களாக அவர்களை தனி வாக்காளர் பட்டியலில் போடவேண்டும் என்று கூறும் சுதந்திரக் கட்சி, சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய முக்கூட்டணிக் கட்சிகளும் மே தினவிழா கொண்டாடுகின்றன வெகு விமரிசையாக!

மலை நாட்டுத் தமிழ்த் தொழிலாளர்களுக்கு இலவச அரிசி, வைத்தியசேவை கல்வி போன்றவசதிகள் செய்து கொடுக்கக் கூடாது— அவர்களை நாட்டைவிட்டு விரட்ட வேண்டும் என்று கூறும் ஆர். ஜி. யும் தொழிலாளருக்காக கண்ணீர் வடிக்கிறார்!

இவற்றை யெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது—இக்கட்சிகளின் ஆஷாடபூதித்தனத்தை நினைக்கும்போது —அழுவதா சிரிப்பதா என்று நமக்குவிளங்கவில்லை—

இந்நாட்டுத் தொழிலாளர்களை—தமிழ்த் தொழிலாளர்கள்—சிங்களத் தொழிலாளர்கள் என்று கூறுபோட்டு பாரபட்சம் காட்டும் இவர்களுக்கு மே விழாவைக்கொண்டாட என்ன அருகதை—யோக்கியதை— இருக்கிறது என்றுதான கேட்கிறோம்.

உண்மையில் இந்நாட்டில் மே விழாக் கொண்டாடக்கூடிய பூரண தகுதியும் உரிமையும் இலங்கைத் தமிழரசுக் கட்சியொன்றே யொன்றுக்குத்தான் உண்டு!

10 இலட்சம் மலைநாட்டுத் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினையை வைத்து—அவர்களை அரசியல் அனாதைகளாக்கி—நாடற்றவர்களாக்கியதை வன்மையாக எதிர்த்து—உருவாகிய கட்சி ஒன்று இலங்கையில் உண்டென்றால் அது இலங்கைத் தமிழரசுக் கட்சிதான்!

ஒற்றையாட்சியின் கீழ் ஒடுக்கப்பட்டு—உரிமை பறிககப்பட்டு, ஆமைகளாய், ஊமைகளாய், அடிமைகளாய் வாழும் இந்நாட்டு தமிழ் மக்களின் இன விடுதலைக்சாக போராடி வரும் தமிழரசுக் கட்சிதான் மே தினத்தை உணர்வுடனும் உறுதிப்பாட்டுடனும் கொண்டாட முடியும்! கொண்டாடி வருகிறது!

இந்நாட்டு அரசியற் கட்சிகளில், தனது தொழிற் சங்க பலத்தை அரசியல் நோக்கங்களுக்குப் பயன்படுத்தாத ஒரேயொரு கட்சி இலங்கைத் தமிழரசுக் கட்சிதான்!

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இறுதி இலட்சியமாகிய சமஷ்டி ஆட்சி மலரும்போதுதான் இந்நாட்டுத் தமிழ்த் தொழிலாளர்களும், சிங்களத் தொழிலாளர்களும் சமவுரிமையுடன் தலை நிமிர்ந்து வாழும் நிலையேற்படும்—

இதை உணர்ந்து—தமிழ் பேசும் தொழிலாளர்களை தமிழரசுக் கட்சியின் சீரிய தலைமையில் மொழிவழியில் ஒன்றுபட்டு உரிமைக்குப் போராட வரும்படி இம் மே நாளில் அறைகூவி அழைக்கிறோம்—

இந்நாட்டின் தொழிற் சங்கப் போராட்டத்தில் பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு தன் மார்பு காட்டி மாண்டுபோன தியாகி கந்தசாமியை இடதுசாரிகள் இன்று மறந்துபோய் விட்டார்கள்.

காரணம் அவன் ஒரு தமிழன்!

ஆனால் தியாகி கந்தசாமியை தமிழினம் ஒரு போதுமே மறவாது!

தொழிலாளர் உரிமைப் போராட்டத்தில் உயிர்நீத்த தியாகி கந்தசாமிக்கும், மொழிப் போரில் உயிர்நீத்த தொழிலாளர் செல்வங்கள் திருமலை நடராசன், ஐயாவு, பிரான்சிஸ் ஆகியோருக்கும் இம் மே நாளில் நமது வீர வணக்கத்தை தெரிவித்துக்கொள்ளுகிறோம்!

ஓங்குக தொழிலாளர் ஒற்றுமை!

# தமிழரசு சாதித்ததென்ன என்போரே இதோ நமது சாதனைப் பட்டியல்!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காந்தி கருதியிருந்தால் இதுவரை இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைத்திருக்குமா? வெள்ளைக்காரனுக்கு கோபம் வருமென்று காந்தி அடிகள் விடுதலைக்குரலை எந்த சந்தர்ப்பத்திலுமே அடக்கிக் கொண்டதில்லை!

சிங்களவரைத் திருப்திபடுத்துவதற்காகவே பத்து லட்சம் மலைநாட்டுத் தொழிலாளரின் உரிமை பறிக்கப்பட்டபோது திரு. பொன்னம்பலம் வாய்மூடி மௌனியாக இருந்தார், அதனால் கிடைத்ததென்ன?

எட்டுத் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இல்லாதொழிந்து போனார்கள். அந்தத் தமிழ்ப் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட்ட தொகுதிகளில் இன்று சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவுசெயயப்படுகிறார்கள்.

சிங்கள மக்களைக் கோபப்படுத்தக் கூடாது என்று திரு. பொன்னம்பலம் நினைதது மந்திரியாக இருந்த காலத்தில்தான் மட்டக்களப்பு மாவட்டத்திலும் திருக்கோணமலை மாவட்டத்திலும் அம்பாறை கந்தளாய் அல்லை குடியேற்றத் திட்டங்கள் மூலம் பல ஆயிரம் ஏக்கர் தமிழ்ப் பிரதேசம் பகிரங்கமாகக் கொள்ளையடிக்கப்பட்டது. அத் தமிழ் நிலத்தில் சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படும் நிலை உருவாகியது!

இன்று தனிச் சிங்களச் சட்டம் புகுத்தப்பட்டு ஓரினத்தின் மொழியுரிமை பறிக்கப்பட்டதன் பின்பும் சிங்கள மக்கள் கோபப்படுவார்கள். ஆகவே, தமிழ் பேசும் மக்கள் வாய் மூடி மௌனிகளாக இருக்கவேண்டும் என்று திரு. பொன்னம்பலம் கூறுவது தமிழ் பேசும் மக்களை வாழ வைக்கவா? அல்லது வரலாற்றில் அடியோடு மாளவைக்கவா?

தமிழரசுக்கட்சி இதுவரை எதையும் செய்யவில்லை என்று திரு. பொன்னம்பலம் கூறுகிறார்! முழுப் பூசணிக்காயை திரு. பொன்னம்பலம் சோற்றிலே புதைக்க முயல்கிறார் என்றே சொல்லுவேன்!

1956ஆம் ஆண்டு தனிச் சிங்கள சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றிவிட்டு லண்டன் மாநகர் சென்ற பண்டாரநாயக்கா மொழிப் பிரச்சினையை முடித்துவிட்டு வந்திருக்கிறேன் என்று திமிரோடு கூறினார். ஆனால் அதே பண்டாரநாயக்க அடுத்த ஆண்டு தந்தை செல்வாவோடு ஓர் அரசியல் ஒப்பந்தம் செய்யவும் அந்த ஒப்பந்தத்தின் மூலம் வடகிழக்கு மாகாணத்தின் நிருவாக மொழியாக தமிழ் இருக்குமென்றும் நீதிமன்றம், பொலீஸ், ஆகிய இடங்களெங்கும் தமிழ் இடம் பெறும் என்றும் உறுதிப்படுத்தவும் 1958இல் தமிழ் மொழி உபயோக மசோதாவை பாராளுமன்றத்தில் கொண்டுவரவும் காரணமாக இருந்தது தமிழரசுக் கட்சி அல்லவா? அந்த நேரத்தில் ஒப்பந்தத்தைக் கிழித்து எறியுங்கள் ஒரு மாதத்தில் புதுத்திட்டம் தருவேன் என்று சொன்ன திரு. பொன்னம்பலம் 144 மாதங்களாகியும் திட்டம் தராமல் இருப்பதென்ன?

1960இல் பங்குனி பொதுத்தேர்தலின் பின் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைத் தரமறுத்த டட்லி சேனநாயக்காவை 1965 ஆம் ஆண்டு தமிழ்மொழி(சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம் கொண்டுவரச் செய்ததும் தமிழ்ப்பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றத்தை இல்லாமல் நிறுத்தி வைக்கச் செய்ததும் மாவட்டசபையினை ஒப்புக்கொள்ள வைத்ததும் தமிழரசுக்கட்சியின் வெற்றிகள் என்பதை திரு. பொன்னம்பலம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

உரிமை இழந்த மலையக மக்களுக்கு 1960இல் பாராளுமன்றத்தில் நியமன அங்கத்துவம் பெற்றுக்கொடுத்தது தமிழரசுக்கட்சி அல்லவா?

1956இல் இருந்து 1970 வரை அரசாங்கத்தின் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் எதுவும் வடகிழக்கு மாகாணங்களில் நடைபெறாது தடுத்து வெற்றி கொண்டது தமிழரசுக் கட்சி அல்லவா?

இலங்கையின் வரலாற்றில் முதல் தடவையாக பண்டாரநாயகாவின் கட்சியும் டட்லியின் கட்சியும் வடகிழக்கு மாகாணங்களை தமிழரின் பாரம்பரிய உரிமைப் பிரதேசமாக ஒப்புக்கொண்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட வைத்தது தமிழரசுக்கட்சி அல்லவா?

தமிழாசிரியர்கள் தமிழ் தட்டெழுத்தாளர்கள் சுருக்கெழுத்தாளர்கள் வானொலி தமிழ் அறிவிப்பாளர்கள் சிற்றூழியர்கள் ஆகியோருக்கு சிங்கள நிபந்தனையில் இருந்து விதி விலக்குப் பெற்றுக்கொடுத்தது தமிழரசுககட்சி அலவவா?

பதவி உயர்வுப் பரீட்சைகளை தமிழிலேயே எடுக்க வழி செய்தது தமிழரசுக் கட்சி அல்லவா?

பாராளுமன்றத்தில் சமுக ஏற்றத்தாழ்வுத் தடைச்சட்டத்தைக் கொண்டுவரச் செய்து அதை நிறைவேற்றுவதற்கு மூலகாரணமாக இருந்தது தமிழரசுக் கட்சி அல்லவா?

மட்டக்களப்பான், யாழ்ப்பாணத்தான், மலைநாட்டான் என்று இலங்கைத் தமிழினத்தை நீங்கள் பிளவுபடுத்தி சிதைத்த வேளையில் ஈழத் தமிழன் எங்கிருந்தாலும் தமிழனே என்று தமிழின ஒற்றுமையைக் காப்பாற்றியது தமிழரசுக் கட்சியல்லவா?

ஈழத் தமிழினத்துக்காக போர்க்களத்தில் இறங்கி இருமுறை தலைவர்கள் தடுப்புக் காவலில் இருக்கவும். தனிச் சிங்கள வெறியின் ஓர் அம்சமான சிங்கள சிறீயை அழித்து பல தொண்டர்கள் சிறை செல்லவும் செயலாற்றியது தமிழரசுக் கட்சி அல்லவா?

வரலாற்றில் உலகிலேயே முதன் முதல் தனித் தமிழ் அஞ்சல் அலுவலகம் நடத்தி தமிழ் முத்திரை வெளியிட்டு வீரப்போர் புரிந்தது தமிழரசுக் கட்சி அல்லவா?

ஈழத்தமிழினத்தின் விடுதலைக்காக திருமலை நடராசன் போகந்தலாவ ஐயாவு பிரான்சிஸ், கொடிகாமம்வேலு ஐயா முதலான வீரத்தியாகிகளைப் பலி தந்து மானம் நிலை நிறுத்தியது தமிழரசுக் கட்சியல்லவா?

திரு. பொன்னம்பலம் அவர்கள் தமிழரசுக்கட்சி என்ன சாதித்திருக்கிறது என்று கேட்கிறார்......தமிழரசுக் கட்சியின் சாதனைகளைச் சொல்வதனால் மூச்சு விடாமல் சொல்லிக்கொண்டே போகலாம். அந்த அளவுக்கு நாங்கள் இந்த நாட்டில் செயலாற்றியிருக்கிறோம்!

இவ்வாறு இராசதுரை கூறினார்.

---

## உறுதியான ஒரே கட்சி தி. மு. க. தான்

### டில்லி பத்திரிகை பாராட்டு

தி. மு. க. அரசின் மனப்பான்மை தனித்து இயங்கக் கூடியதாகவே இருக்கின்றது. அதனாலேயே அது தமிழக கூட்டமன்ற இடைத் தேர்தலில் சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சியை எதிர்த்து வெற்றியும் பெற்றுள்ளது.

நாட்டிலுள்ள ஏனைய கட்சிகளெல்லாம் பிளவுபட்டு அழிந்து வரும் இவ்வேளையில் தி. மு. க. ஒன்றுதான் தன் கொள்கையில் உறுதியாயிருந்து பலம் பெற்று வருகிறது.

தமிழக முதலமைச்சரின் கொள்கைகள் பாராட்டக் கூடியனவாகவும் கணிசமான பலனைக் கொடுக்கக் கூடியதாகவுமிருக்கிறது.

இவ்வாறெல்லாம் அந்த டில்லிப் பத்திரிகையான "இந்துஸ்தான் டைம்ஸ்" எழுதியுள்ளது.

---

## நெடுங்கேணியிலும் காங்கிரசார் காடைத்தனம்

(நெடுங்கேணி நிருபர்)

நெடுங்கேணிப் பகுதியில் காங்கிரசாரின் காடைத்தனம் தலைவிரித்தாடுகின்றது திரு. செல்லத்தம்புவுக்கு இருக்கும் செல்வாக்கை கண்ட காங்கிரஸ்வாதிகள் சர்வாதிகார முறையில் வோட்டுத் தேட முற்பட்டிருக்கின்றனர். சர்வாதிகாரம் செல்லத்தம்புவுக்கே மேலும் ஆதரவைக் கொடுத்துவருகின்றது,

அண்மையில் தடித்த தமிழரசு ஆதரவாளரான வினாசித்தம்பி என்பவரைத் 'தமிழரசுக்கு வேலை செய்யப்போறியா' என்று கேட்டுக்கொண்டே இரண்டு காங்கிரஸ்காரர்கள் மிகவும் மோசமானநிலையிலே தாக்கினர். அதைப் பார்த்தவண்ணம் தமிழரசு வாலிபர்கள் பொறுமையுடன் இருந்தனர் காங்கிரஸ் வாதிகள் அடித்தது மட்டுமல்லாமல் அவரிடம இருந்த பணத்தையும் பறித்தனர். கனனத்தில் அடித்த வோட்டுத்தேடும் காங்கிரஸே உள்ளத்தில் அடித்து உங்களை விரட்டி அடிப்போம்; சிறிது பொறுங்கள் என்று கூறினர் பொது மக்கள்!

# ஆர். ஜி. யே அடக்கு நாவை!

# திருமலை எங்கள் பிரதேசம்!

## நேமிநாதன் பகிரங்க எச்சரிக்கை!


திருக்கோணமலை, ஏப். 26

''தமிழினத்தைக் கூறு போட்டு அதன் மூலம் தமக்குச் சாதகமான அரசியல் இலாபத்தை சம்பாதித்துக் கொள்ளும் பொருட்டு திட்டமிட்டு வித விதமான பிரச்சாரங்கள் புரிந்து வரும் சிங்களக் கட்சியின் தலைவர்களுடைய வாலை ஒட்ட நறுக்குவதற்கு இனியும தமிழ்ப் பேசும் மக்கள் பின்னிற்கக் கூடாது.

இந் நாட்டிலே பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வருகின்ற தமிழ் மக்களை நாடு கடத்த வேண்டும்; அவர்களது அரசியலுரிமைகள் அறுத்தெறியப்பட வேண்டும்' என்றெல்லாம் ஆர். ஜி. சேனநாயக்காக்களும், ஹேமா பசநாயக்காக்களும் கூறினல் அது இந் நாட்டிலே, — ஜனநாயகம் தழைத்தோங்குகின்றது என்று மார்தட்டிக் கொள்ளும் டட்லியின் ஆட்சியிலே வகுப்பு வாதமாகத் தெரிவதல்லை, பிரச்சினையாக எழுவதில்லை. ஆனல் தமிழ்ப் பாராளுமன்றப் பிரதிநிதி ஒருவர்; பொதுமக்களுக்கு குந்தகம் விளைவிக்கின்ற இராணுவத்தினரை மக்கள் நெருக்கமாக வாழும் இடங்களிலிருந்து அகற்றுங்கள்; எமது பிள்ளைகளின் போதனமொழி விவகாரத்தில் சிங்களத்தைத் திணிக்காதீர்கள்' என்றெல்லாம் நியாய பூர்வமான கோரிக்கைகளைக் கேட்டால் அது மாத்திரம் வகுப்புவாதமாகவும் துவேஷமாகவும் பட்டுவிடுகிறது எமது ஆட்சியாளருக்கு. விந்தையிலும் விந்தை இது.

தமிழ் மக்களின் தலைநகராம், சந்திரசேகரம் முதல் நடராஜன் வரை தமிழினத்திற்காக தமது உயிரையே அர்ப்பணித்த எண்ணற்ற விடுதலை வீரர்களை ஈன்றெடுத்த தாயகமாம் எமது திருக்கோணமலையை, தமிழ் மக்களின் கலாச்சார பாரம்பரியங்கள் துலங்குகின்ற இப் புண்ணிய பூமியை 'சிங்களப் பிரதேசம்' என்று வாய் கூசாது கூவித் திரிகின்ருர்களே. அவர்களுக்குக் கூறுகின்றேன், இன்று முதல் உங்களது கூக்குரல்களை நிறுத்தி நாவை அடக்கிக் கொள்ளுங்கள் என்று. அர்த்தம் தெரியாமல் பிதற்ருமல் திருக்கோணமலையின் வரலாற்று ஆதாரங்களை எடுத்து நோக்குங்கள் என்று அவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கின்றேன்.

''அப்பே ரட்ட திருக்குணமலய'' என்று கூறிக் கொண்டு திரியும் ஆர். ஜி. சேனநாயக்காவுக்குப் பகிரங்கமாகக் கூறுகின்றேன்: 'திருகோணமலை சிங்கள பிரதேசம்' என்று ஆர். ஜி. என்ன வேறு எவர்தானும் கூறிக் கூக்குரலிட்டாலும் 'திருக்கோணமலை ஒரு தமிழ்ப் பிரதேசமேதான். அது தமிழ்ப் பிரதேசமாகவே என்றும் இருக்கும்' என்பதனை இந்த நேமி என்றும் கூறுவான், அதற்காகச் செயற்படுவான் என்பதனையும் அறிந்து கொள்ளுங்கள்.



இக் கருத்தினை நான் இவ் விடயத்தில் வைத்து மார் தட்டி, தோள் தட்டி மிகவும் ஆணித்தரமாக, பகிரங்கமாக உறுதியுடன் மக்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்.''

இவ்வாறு மிகவும் வீராவேசமாக 25-4-70ல் அன்று நடைபெற்ற முதலாம் வட்

(4ம்பக்கம் பார்க்க)

## புங்குடுதீவில் கதிரவேல் படும் பாடு!

(வேலணை நிருபர்)

ஊர்காவற்றுறைத்தொகுதியில் சுயேச்சை வேட்பாளராக போட்டியிடும் திரு. ப. கதிரவேலு புங்குடுதீவு வாழ் மக்களை பல வழிகளிலும் ஏமாற்றி பண்டிதர் இரத்தினத்தை தோற்கடித்து தான் ஒரு முறை பாராளுமன்ற ஆசனத்தில் அமர்ந்துவிட வேண்டுமென்று பகற்கனவு கண்டு கொண்டு இருக்கின்ருர்.

திரு. கதிரவேலு அவர்கள் இங்குள்ள வீடுகளுக்குச் சென்று நான் உங்கள் சொந்தக்காரன், உங்கள் ஊரவன் எனக்கு இம்முறை வாக்களியுங்கள். இன்றேல் உங்கள் வீட்டிலேயே பொலிடோல் குடித்து செத்துவிடுவேன் என்று பொலிடோல் குப்பியுடன் ஒற்றைக்காலில் நின்ருராம். இவரது தொல்லையைச் சகிக்கமுடியாத புங்குடுதீவுவாழ் தமிழரசு மக்கள் ஒரு வேளை அவர் இறந்துவிடுவாரோ என்ற பயத்தினல் சமாதானம் கூறி அனுப்பிவிடுகின்ருர்களாம்.

இன்னுமொரு வேடிக்கை என்னவெனில் திரு. கதிரவேலு வாக்குகேட்டு வீடுகளுக்கு செல்லும்போது வெற்றிலைசகிதம்செல்கின்ருர்வீட்டிலுள்ள கணவன்மாரையும், மனைவியரையும் தான் கொண்டுசெல்லும் வெற்றிலையில் அடித்து கணவன் ஆணை, மனைவி ஆணை, பிள்ளைகள் ஆணை எனக்கு வோட்டுப் போடுவேனென சத்தியம் செய்யும்படி தொல்லை கொடுத்து வருகின்ருராம். சத்தியத்தில் நம்பிக்கையுள்ள அசத்தியவான். இவரது இச்செய்கைகளை எண்ணி இப்பகுதி மக்கள் வீரப் புதல்வர்களை ஈன்றெடுத்த புண்ணிய பூமியாகிய தீவுப் பகுதி இப்படி ஒருவரையும் பெற்றுவிட்டதேயென துயரப்படுகின்ருர்கள்,

## ஒரு கட்சியை எதிர்க்க எத்தனை கட்சிகள்!

### அத்தனை பெரிய கட்சியா தமிழரசு கட்சி?

தமிழரசுக் கட்சியை எதிர்த்து எப்படியாவது அந்தத் தமிழர் விடுதலைப் படையை ஒழித்துக்கட்டிவிட வேண்டும் என்று கிளம்பிய கட்சிகளின் பட்டியல் கீழே தருகிறோம். பாவம் இந்தக் கட்சிகள் அனைத்தும் கடந்த காலங்களில் தோல்வியே கண்டன. இப்போது புதிதாகச் சில கட்சிகள் தோன்றியுள்ளன. இவையும் தோல்வி காண்பது தவிர்க்கமுடியாததாகும். சத்தியத்தை எதிர்த்து யார்தான் வெற்றிபெறமுடியும்? இதோ இதுவரை தோன்றிய தமிழரசு எதிர்ப்புக் கட்சிகளின் பட்டியல்;—

தமிழ்ப்பகுதிகளில் தமிழரசை எதிர்த்து அழிந்தவை:—

அடிப்படை உரிமை ஜனநாயக முன்னணி
தலைவர்: வி, குமாரசாமி

தமிழ்நாடு வாலிப முன்னணி
தலைவர்: வி. குமாரசாமி

அடங்காத் தமிழர் முன்னணி
தலைவர்: சி. சுந்தரலிங்கம்

கிழக்கிழங்கை ஒற்றுமை முன்னணி
தலைவர்: எதிர்மனசிங்கம்

யாழகற்றுச் சங்கம்
தலைவர்: வவுனியா சிவசிதம்பரம்

ஈழத்தமிழர் விடுதலை முன்னணி
தலைவர்: முன்னுள் செனட்டர் மாணிக்கம்

இடதுசாரிக்கூட்டணி
தமிழ்பகுதி தலைவர்:ஆனந்த சங்கரி

தமிழ்பேசும் ஐக்கிய முன்னணி
தலைவர்: எதிர்மனசிங்கம்

உரிமை குறைந்த தமிழர் கட்சி:
தலைவர்: ஜே. எல். சுந்தரம்

ஜனநாயக சோஷலிச முன்னணி
தலைவர்: விஜயேந்திரா

காஷ்மீர் போன்ற தனித்தமிழ் ராஜ்யம் கட்சி
தலைவர்: ஆ. தியாகராசா

சிவசுந்தரம் கட்சி. தலைவர்: சிவசுந்தரம்

தமிழ்ப்பகுதிகளில் தமிழரசை எதிர்த்து அழிய இருப்பவை:—

தமிழ்காங்கிரஸ்
தலைவர்: ஜி. ஜி. பொன்னம்பலம்

சுயாட்சிக் கழகம்
தலைவர்; வி. நவரெத்தினம்

தி. இ. க. (திராவிடர் இழிவுக்கழகம்)
தலைவர்: இளஞ்செழியன்

ஈழத்தமிழின ஒற்றுமை முன்னணி
தலைவர்: சி. சுந்தரலிங்கம்

யூ. என். பி, கட்சி
தலைவர்: டட்லி சேனநாயகா

சிறிலங்கா சுதந்திரக் கட்சி
தலைவர்; சிறிமா பண்டாரநாயக்க

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி
தலைவர்; விக்கிரமசிங்க

சமசமாஜக் கட்சி
தலைவர்: என். எம். பெரேரா

சர்வோதய முன்னணி
தலைவர்: ப. கதிரவேலு

## தமிழரசுத் தோழர்கள் மீது வீண் அபவாதம்!

### மித்திரன் செய்திக்கு மறுப்பு!

(திருகோணமலை நிருபர்)

25-4-70 திகதிய 'மித்திரனில்' 3-ம் பக்கத்தில் ''திருமலையில் தமிழரசு ஐ. தே. க. ஆதரவாளர் மோதல்'' என்ற தலைப்பின் கீழ் வெளியாகிய செய்தி மிகவும் ஆச்சரியத்தையும், வியப்பையும் தருகின்றது. இச்செய்தியில் 'காளிகோயிலை நோக்கி வந்துகொண்டிருந்த ஐ. தே. க. ஆதரவாளர் கோஷ்டியை கோயிலுக்கருகில் நெருங்கவிடாதவாறு தமிழரசுக் கட்சி ஆதரவாளர்கள் பாதையை அடைத்து நின்றதாக கூறப்பட்டுள்ளது. உண்மையில் இது வெறும் பொய்யாகும். தமிழரசார் கோஷ்டி தனது வேட்பாளர்களுடன் (திரு. நேமிநாதன, திரு. தங்கத்துரை) காளி கோயிலடியில் பிரார்த்தனைக்காக நின்றிருந்த சமயத்தில பின்னல் வந்துகொண்டிருந்த ஐ. தே. க. ஆதரவாளர் கோஷ்டி காளி கோவிலுக்கு வரும் எண்ணமில்லாமலே கல்லூரி வீதியால் திரும்பிச் சென்று விட்டது.

உண்மையில் ஐ. தே. க. ஆதரவாளர் கோஷ்டிக்கு காளி கோயிலுக்கு வரும் எண்ணமிருந்தால் அவர்கள் பொருத்திருந்து தமிழரசார்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஒரு திருத்தம்

சுதந்திரன் 27-4-70 இதழில், முதல் பக்கத்தில் சிங்களக் குடியேற்றத்திற்கு ஆதரவாக ஒரு குரல் என்ற தலைப்பில் ஈழநாடு 24-4-70 இதழில் வெளிவந்ததாகக் குறிப்பிட்டு வெளியிடப் பட்டுள்ள செய்தியைக் குறித்தே இதனை எழுதுகிறோம்.

24-4-70 ஈழநாடு இதழில் சண்டிலிப்பாய் பொது மேடைக் கூட்டம் குழப்பத்தில் முடியக் காரணம் யார், என்ற தலைப்பில் வெளிவந்த கட்டுரையில் கீழ்க் கண்டவாறே சம்பந்தப்பட்ட குறிப்பு வெளிவந்திருக்கிறது:

கல்லோயாப் பகுதிகளில் சிங்களவர்ளே அதிகமாகக் குடியேற்றப்பட்டு அப்பகுதிகள் சிங்களப் பகுதிகளாக மாற்றம் பெற்றுவிட்டன என்பதற்குச் சிவனேசனின் பதில்: கல்லோயாவுக்கு கோடிக்கணக்கான ரூபாய செலவழிக்கப் பட்டுள்ளதே, அதெல்லாம் தமிழ் மக்களின் காசா சிங்கள மக்களின், முஸ்லிம்களின், இலங்கையரின் காசு. இந்தக் குடியேற்றங்களில் தமிழ் மக்கள் குடியேற விரும்பவில்லை. அதுதான் சததியமாக உண்மை.''

ஈழநாடு 24-4-70 இதழில் வெளிவந்துள்ள மேற்படி பந்தியில் அடிக்கோடிடப

(4-ம் பக்கம் பார்க்க)

## வண்ணார்பண்ணையில் இரும்பு மனிதனுக்கு பெருகும் ஆதரவு

(கொக்குவில் நிருபர்)

ம. பொ. சி.யின் மீசை, வ. உ. சி.யின், வீரம், என்ற சொற்களுக்கு உரியவர் உயர் திரு. இராசையா அவர்கள். யாழ். இந்து தமிழ் கலவன் பாடசாலைக்கு எதிரில் வாழும் இராசையா அவர்கள் அப்பகுதி மக்களுக்கு ஒரு முன் மாதிரி. இராசையா அண்ணன் சொல்கிருர் என்ருல் ஏன்? என்ற கேள்வியே தேவையில்லை என எண்ணுவர் அப்பகுதி மக்கள். இந்த திரு. இராசையா அவர்கள் தமிழ் காங்கிரசின் பேராதரவாளர். உடல், பொருள், அத்தனையும் அற்பணித்து உழைக்கும் பண்பாளர் தான் ஒரு இயக்கத்தில் ஈடுபட்டுவிட்டால் இருதய சுத்தியுடன் பணியாற்றும் பண்பாளர். அந்த நல்ல மனிதர் காங்கிரசின் போக்கு கண்டு அதிருப்தி அடைந்ததுடன், தமிழ் பேசும் இனத்தின் நல்வாழ்வுக்கு இருதய சுத்தியுடன் இயக்கம் இன்பத் தமிழரசே என்பதைஉணர்ந்ததோடு, சிலரைப்போல வாய்மூடி கைகட்டி நிற்காமல் பிழை கண்டதும் வெகுண்டு எழுந்து காங்கிரசைக் கண்டித்து தனது வீட்டிலே இரும்பு மனிதனுக்கு பெரும் வரவேற்பு கொடுத்தார். சென்றவாரம் தனது வீட்டிற்கு வந்த இரும்பு மனிதனுக்கு மலர் மாலைசூடி வரவேற்றதுடன் அப்பகுதி ஆதரவாளர்களை அழைத்தும் ஒரு ஆலோசனைக் கூட்டத்தையும் கூட்டினுர்.

இராசையா அண்ணன் இரும்பு மனிதனுடனு! இது ஒன்றேபோதும் ஐயோ எமக்கு தோல்விதான், என காங்கிரஸ் ஆதரவாளர்கள் வாய் திறந்து பேசிக்கொள்வதும் இப்போது கேட்க கூடியதாய் இருக்கிறது.

முஸ்லீம்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டுப் பணத்தை இன்று தமி முடியாத ஒரு நிகழ்ச்சி என்று சொன்னுர் திரு. மாணிக்கவாசகர்.

தமிழ்-முஸ்லிம் என்ற பேதமற்று—இன ரீதியற்ற முறையில் தமிழினம் என்ற ஒரு நோக்கோடு இளைஞர் கூட்டம் ஒன்று சேர்ந்து நியமனப் பத்திரத் தாக்கலின் போது மட்டுநகர் கச்சேரி முன்றலில் குழுமி நின்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
SUTANTIRAN

# கல்முனை தொகுதியின் தேர்தல் பிரசாரத்தை இராசதுரை தொடங்கிவைத்தார்

## இஸ்லாமிய மாதர்கள் குரவை பாடி குதூகல வரவேற்பளித்தனர்

### ஜனாப். உதுமான் லெவ்வையின் வெற்றி உறுதியாச்சு

கல்முனை, ஏப். 30

கல்முனைத் தொகுதியின் வாக்காளர் மிகுந்த அதிர்ஷ்டக்காரர்கள். இங்கு போட்டியிடும் அபேட்சகர்கள் மூவரும் கட்சிகளின் சார்பில் போட்டியிடுகிறார்கள், ஐ. தே. கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி— தமிழரசுக்கட்சி மூன்று கட்சிகள் இங்கு தேர்தலுக்கு நிற்கின்றன. சிறுபான்மையினரான தமிழ் பேசும் மக்களுக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

சிறுபான்மை மக்களின் உரிமைகளை பறித்தவர்களும் —நம்பிக்கை துரோகமிழைத்தவர்களும் நமக்கு மத்தியில் தங்கள் கட்சியை தேர்தலுக்கு நிறுத்தியிருக்கின்றனர். சிறுபான்மை மக்கள் இச்சந்தர்ப்பத்தில் சரியான பாடம் படிப்பிக்கவேண்டுமென்று—

கல்முனைக்குடியில் டாக்டர் உதுமா லெவ்வை அவர்களை ஆதரித்து நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் திரு. செ. இராசதுரை குறிப்பிட்டார்.


பொதுக்கூட்டத்திற்கு முன் கல்முனைக்குடியில் தமிழரசு காரியாலயமொன்றை திரு. செ. இராசதுரை திறந்து வைத்தார்.

ஜனாப் உதுமாலெவ்வை பேசுகையில் தமிழ்பேசும் மக்களின் விடுதலைக்கு போராடும் ஒரே கட்சி தமிழரசுக் கட்சி. அதன் அபேட்சகராகப் போராடும் என்னை ஆதரியுங்கள் என்று குறிப்பிட்டார்.

எஸ். மயில்வாகனம், அ. இ. எம். ஜி. ஆர். மன்றத் தலைவர், எஸ். தேவநாயகம் கி. ச. உறுப்பினர், ஆரயம்பதி: ஜனாப் பாருக் மற்றும் பலர் பேசினர்.

# பொன்னம்பலத்தின் வீருப்பை அடக்கினார் இரும்பு மனிதர்!

TABLES TURNED




இரும்பு மனிதர் டாக்டர் நாகநாதனுக்கும் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்துக்குமிடையே ஒரு பெரிய 'மோதல்'!

மோதலின் விளைவு—இரும்புடன் மோதினால் என்ன நடக்குமோ அது நடந்து விட்டது திரு. பொன்னம்பலத்துக்கு.

இது 1949ல் நடந்த ஒரு நிகழ்ச்சி—21 ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த சம்பவம் என்றாலும் அதன் முக்கியத்துவம் கிஞ்சித்தும் குறையவில்லை—சுவை குன்றவில்லை.

தமிழரசுத் தந்தை அவர்களும், டாக்டர் நாகநாதனும் தமிழ் காங்கிரஸிலிருந்து வெளியேறிய காலமது. செனட்சபை உறுப்பினராக இருந்த டாக்டர் நாகநாதன் ஈராண்டுப் பதவிக் காலம் காலாவதியானதும் மீண்டும் செனட்சபைத் தேர்தலுக்கு வேட்பாளராக நின்றார். அவரை எதிர்க் கட்சிகள் ஆதரித்தன. தமிழரசுக் கட்சி, இலங்கை—இந்தியர் காங்கிரஸ், சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவைகளே அன்றைய எதிர்க்கட்சிகள்.

திரு. பொன்னம்பலத்தின் தமிழ்க் காங்கிரசும் ஒரு வேட்பாளரை நிறுத்தியது. அவரோ செல்வாக்குமிகுந்தவர். இந்து பரிபாலன சபை போன்ற ஸ்தாபனங்களிலே உயர்பதவி வகித்தவர். தமிழ் காங்கிரஸ் அரசாங்கத்தின் ஓர் அங்கமாகவும் இருந்தது. திரு. பொன்னம்பலம் ஓர் அமைச்சர் ஆசனத்தை வேறு அலங்கரித்துக்கொண்டிருந்தார். முழு அரசாங்கக் கட்சியும் அவரது வேட்பாளரை ஆதரித்து நின்றது. ஆகவே அவருக்கு வெற்றி நிச்சயம் என்றாகி விட்டது.

திரு. பொன்னம்பலம் வெற்றிப்பூரிப்பிற் மகிழ்ந்தார். தமிழ் காங்கிரஸிலிருந்து வெளியேறியதற்காக டாக்டருக்குச் சரியான பாடம் கற்பிக்கப்போவதாகத் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தாராம்.

வெற்றிக்களிப்பில் மிதக்கும் வேளையில் அவரைப் பத்திரிகை நிருபர் ஒருவர் பேட்டி கண்டு செனட் சபைத் தேர்தலில் டாக்டர் வெற்றியடைவாரா என்று கேட்டுவிட்டார்.

உடனே அவர் பளிச்சென்று பதிலளித்தாராம். பதில் என்ன தெரியுமா?

"இந்த டாக்டரை ஒரு கிராமப் பகுதி வைத்திய சாலையின் இருட்டிலிருந்து அரசியல் தலைமை என்னும் பிரகாசமான ஒளிக்குக் கொண்டு வந்தவன் நான்தான். எங்கிருந்து அவரைக் கொண்டுவந்தேனோ அதே இடத்துக்கு நான் விரைவில் அவரை அனுப்பிவைப்பேன்? என்று பெருமிதத்துடன் கூறி மார்தட்டினாராம்.

தேர்தல் நடைபெற்றது. இரும்பு மனிதர் மிக அதிகப்படியான வாக்குகளைப் பெற்று முதலாவதாக வந்து வாகை மாலைசூடினார். திரு. பொன்னம்பலத்தின் வேட்பாளரோ படுதோல்வி.

இந்த அதிசயம் எப்படி நிகழ்ந்தது? வெற்றிபெற்றது மட்டுமின்றி முதலாவதாகவும் விந்துவிட்டாரே. திரு. பொன்னம்பலம் பேசிய வீருப்பின் கதி என்ன? அதனை நகைச்சுவை ததும்பும் ஒரு கூடார்த்த சித்திரமாகத் தீட்டிவிட்டார் பிரபல கார்ட்டூன் நிபுணர் திரு. கொலெட்.

திரு. பொன்னம்பலத்தின் வீருப்பு அடைந்த கதியை இந்தக் கார்ட்டூன் சொல்லாமற் சொல்கிறது. அதனை இங்கு மறுபிரசுரம் செய்துள்ளோம். 'ஒப்ஸேவர்' ஆங்கிலத் தினசரியில் 28-10-49ல் இக் கார்ட்டூன் வெளியாயிற்று. பொருள் பொதிந்த இச்சித்திரத்தை இன்றும் இரசித்து அனுபவிக்கலாம்.

## பல்கலைக் கழகப் பிரச்சினையில்:

# தமிழ்காங்கிரஸ் கோரிக்கையும் தமிழரசுக் கோரிக்கையும்!

"வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பல்கலைக் கழகம் நிறுவுவதற்கு ஏற்ற இடம் எதுவென்பதை தெரிவு செய்வதை தேசிய உயர் கல்விச்சபை ஒத்திவைத்துள்ளதாக அறிகிறோம்—இதுபற்றி விசாரணை செய்த தேசிய உயர் கல்விச்சபை உபகுழு திருகோணமலையையே சிபார்சு செய்திருப்பதாக அறிகிறோம்—

"தமிழரசுக் கட்சிக்கும், தமிழ் காங்கிரசுக்கும் பல்கலைக் கழகம் நிறுவவேண்டிய இடத்தைப் பற்றிய பிரச்சினையில் மட்டுமன்றி எத்தகைய அந்தஸ்துள்ள பல்கலைக் கழகம் வேண்டும் என்பதிலும் கடும் போர் நடக்கிறது.

"தமிழரசுக் கட்சி திருகோணமலையில் வகுப்புவாத தமிழ்ப் பல்கலைக் கழகத்தை கோருகிறது. தமிழ் காங்கிரசோ, யாழ்ப்பாணத்தில் ஒரு இந்து கலாசார கல்வி நிறுவனத்துக்காகவே தொடர்ந்து வாதாடி வருகிறது.

"இன்றைய நிலையில் ஒரு பூரணத்துவம் வாய்ந்த பல்கலைக் கழகத்தை நாட்டின் எப்பகுதியில் நிறுவுவதென்றாலும் செலவு அதிகம் என்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். நிதிப்பற்றாக் குறைமட்டுமன்றி அதில் பணியாற்ற போதுமான அளவு உத்தியோகத்தர்கள் கிடைப்பதும் முடியாத காரியம்—இன்று இயங்கும் பல்கலைக் கழகங்களில்கூட போதிய உத்தியோகத்தர்கள் இல்லை.

"இந்துக்களுக்கு பல்கலைக்கழக அந்தஸ்துள்ள ஒரு நிறுவனம் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்றால்—அது முழுக்க முழுக்க ஒரு கலாசார பல்கலைக் கழகமாகவேயிருக்க வேண்டுமென்று நாம் வற்புறுத்தி வருகிறோம்—இபபல்கலைக்கழகம் அனுராதபுரத்திலுள்ள பிக்குகள் பல்கலைக் கழகம் போல யாழ்ப்பாணத்தில் நிறுவப்படவேண்டும்."

—'சன்' (30-4-70)

## தமிழரசு...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கோஷ்டி சென்ற பின்னர் வந்திருக்கவேண்டும். எனவே இதிலிருந்து ஐ. தே. க. ஆதரவாளர் கோஷ்டிக்கு காளி கோயிலுக்கு வரும் எண்ணமேயில்லை என்பது புலனாகின்றது. கல்லூரி வீதியால் ஐ. தே. க. ஆதரவாளர் கோஷ்டி திரும்பிய பின்னரும், ஒரு சில ஐ. தே. க. ஆதரவாளர்கள் தமிழரசாருக்கு ஆத்திரம் உண்டு பண்ணக்கூடிய விதத்தில் நையாண்டிக் கோஷங்களை எழுப்பினர். அப்படியிருந்தும் தமிழரசார் கோஷ்டி பொறுமையுடன் நின்றது.

அத்துடன் இச்செய்தியில் 'ஐ. தே. க. வேட்பாளரைத் திரும்பிப் போகும்படி கோஷமிட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. உண்மையில் இதுவும் நடைபெறவில்லை. அவ்வமயத்தில் அங்கு நின்றிருந்த எவரும் இதனை ஒத்துக்கொள்வர். இத்தகைய அநாகரீகமான செயல்களில் ஈடுபடுமளவிற்கு, தமிழரசார் அரசியல் நாகரீக— பண்பாடு புரியாதவர்களல்ல.

எனவே மித்திரனில் வெளியாகிய இச்செய்தியையிட்டு வெளியூர் தமிழரசு அபிமானிகள், பொதுமக்கள் திருகோணமலை தமிழரசு அபிமானிகள் மீது தப்பபிப்பிராயம் கொள்ளக் கூடாது என்பதற்காகவே நான் இந்த மறுப்புச் செய்தியை எழுத வேண்டிய அவசியமேற்பட்டது.

## ஆர். ஜி. யே...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

டாரத் தமிழரசு வாலிப முன்னணியின் அங்குரார்ப்பண வைபவத்தின் போது கூடியிருந்த சுமார் மூந்நூறுக்கு மேற்பட்ட மக்கள் முன்னிலையில் திரு. நேமிநாதன் உரையாற்றினார்.

இதனையடுத்து திரு. ஜீவராசா, நடராசா, மற்றும் பலர் உரையாற்றினார்கள். இறுதியில் நடைபெற்ற உத்தியோகத்தர் தெரிவில் பின்வருவோர் நிர்வாகஸ்தர்களாகத் தெரியப்பட்டனர்.

தலைவர்: வழக்கறிஞர், கே. பொ. சீதாராமன், உப தலைவர்: திரு. யோ. கி. அ. அல்பேட், செயலாளர்: திரு. க. தெய்வேந்திரன், உப செயலாளர்: திரு. சி. சிறீஸ்கந்தராசா, பொருளாளர்: திரு. மு. யேசுராசா, உப பொருளாளர்: திரு. க. ஜோதிநாதன்.

## தமிழரசு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வர். தமது ஏமாற்றத்தையும் ஆத்திரத்தையும் பாவம் அப்பாவியான ஆறுமுகத்தின் மீது செலுத்தினர் அந்தக் கடைகெட்ட காடையர்கள். அவர் திக்குமுக்காடித் திணறும் வரை அந்த 'வீரர்'கள் அவர் மீது மண் அள்ளி வீசிவிட்டுச் சென்றனர்.

வைகாசி 27ல் காங்கிரசு வேட்பாளர்கள் மீது விழவிருக்கும் மண் தான் அது என்பதை அந்தக் காலிகள் அறியார்கள் போலும்!

## ஒரு திருத்தம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட பகுதிகளை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக, "அதினால்தான் தமிழ் மக்கள் குடியேற்றப்படவில்லை" என்று வெளிவந்ததாகப் பிரசுரித்திருப்பது குறித்து மிகவும் வருந்துகின்றோம்.

தங்கள் உண்மையுள்ள,
ஈழநாடு லிமிட்டெட்,
து. சீனிவாசகம்,
பொது முகாமையாளர்.

ஏற்பட்ட தவறுக்கு நாமும் வருந்துகிறோம்.

—ஆர்.

# 2-5-70ல் நடைபெறும் தமிழரசுக் கூட்டங்கள்

தொகுதி: காங்கேசன் துறை.
பேச்சாளர்: அ. அமிர்தலிங்கம், திருமதி அமிர்தலிங்கம், வி, தர்மலிங்கம், கா. பொ. இரத்தினம், இ. மு. வி, நாகநாதன். ★

தொகுதி: பருத்தித்துறை
பேச்சாளர்: அ. அமிர்தலிங்கம், திருமதி. அமிர்தலிங்கம், வி. தர்மலிங்கம், கா. பொ. இரத்தினம், இ. மு. வி. நாகநாதன். ★

தொகுதி: யாழ்ப்பாணம்.
பேச்சாளர்: மு. ஆலாலசுந்தரம், துரைரத்தினம், நவரத்தினம், ஜெயக்கொடி, மார்ட்டின். ★

தொகுதி: ஊர்காவற்றுறை.
பேச்சாளர்: மு. ஆலாலசுந்தரம், மார்ட்டின், துரைரத்தினம், நவரத்தினம், ஜெயக்கொடி. ★

தொகுதி: திருக்கோணமலை, மூதூர்.
பேச்சாளர்: மு. ஆலாலசுந்தரம், மார்ட்டின், துரைரத்தினம், நவரத்தினம், ஜெயக்கொடி, கதிரவேற்பிள்ளை. நேமிநாதன், தங்கத்துரை.

## தமிழரசு வீட்டை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போது ஏனையா நாங்கள் வீட்டுக்கு நேரே தானே போடுவம். அது எங்களுக்கு பழகிப் போய்விட்டது; அதை மாற்ற முடியாது என்று கூறுகின்றார்கள்.

மேற்கூறிய சம்பவங்களை எண்ணிப்பார்க்கும் போது திருமதி நவரத்தினம் அம்மையாரும் பாவம் அவ நல்ல மனிசி. திரு. நவரத்தினமும் வீட்டை இன்னும் மறக்க இயலாது கஷ்டப்படும்போது நாம இலேசில் மறந்து விடமுடியுமா? உயிருள்ளவரை மறக்க மாட்டோம் என அறநெறிக் கலாவர் பண்டிதர் கா. பொ. இரத்தினத்தைப் பெற்றெடுத்த புண்ணிய பூமியில் வாழும் மக்கள் கூறுகின்றார்கள்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக வீதி, 194 ஏ, இல்லத்தில் 1970-ம் வருடம் மே மாதம் 1-ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது

ஆசிரியர்: கோவை மகேசன்.